# <u>உலகளாவிய தாக்கத்திலும் தேவனின் அன்பு</u>

சரித்திரத்தை திரும்பிப் பார்க்கும்போது நாம் கடந்துபோகும் இந்த நாட்கள் உலகம் தழுவிய சிட்சை அல்லது கடவுளிடமிருந்து நமக்கான எச்சரிக்கையின் நாட்கள் என்பது உண்மையாகவே எழுதப்பட இயலும். உலகில் கடந்த நாட்களில் அடிக்கடி ஏற்பட்ட வந்த கொள்ளை நோய்கள், வெள்ளசீற்றங்கள், மற்றும் அக்கினிசூழல்கள் போன்றவை நாம் எண்ணுவதற்கும், வெளியே சொல்வதற்கும் கசப்பானதாக இருப்பினும் இதுவே காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இன்னும் சொல்வதென்றால் "கடைசிநாட்களில்" இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்குமென வேதவாக்கியங்கள் ஏற்கனவே இயம்பியுள்ளதை நாம் படிக்கலாமே. குறிப்பாக, சிருஷ்டிகரை மறுதலித்து அவரைக் குறித்த சிந்தனை மங்கிப்போகும் காலங்களில் இவை நிச்சயம் நடக்கும் என்பதே வேதத்தின் கூற்றாகும்.

கடவுளின் எச்சரிப்பின் சத்தத்தோடு வரும் இந்நிகழ்வுகள் "**இறுதி நியாயத்தீர்ப்பை**" போல் இல்லையென்பதால் இது கடவுளின் அன்பின் பிரதிபலிப்பு என்பது சரியே. அவரிடத்தில் திரும்பி வருவதற்கான இரக்கத்தின் அழைப்பாகவே இதை ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில், இறுதி நியாயத்தீர்ப்பானது கடவுளின் இரக்கத்தின் கதவுகள் நிரந்தரமாக அடைக்கப்பட்டு, அவரைத் தேடாதவர்களின் நிலைமை முடிவுக்கு வரும் தருணமாகும். எனவே, எச்சரிப்பு என்பது யதார்த்தத்தில் முடிவு அல்ல என்பது நல்ல செய்தியே; இத்தருணங்களிலும், எந்தவகை அழிவுகளையும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஏதுக்களையும், திறன்களையும் மனிதர்களுக்கு கடவுள் அருளியிருக்கிறாரே. இதன் மத்தியில், நம்மை தட்டியெழுப்பி, நம்மைத் தாழ்மைப்படுத்தவும் - நாம் கடவுளின் சிருஷ்டிப்புகளாக அவரின் கரத்தின் கீழுள்ள மனுக்குலம் எனவும், நமது வாழ்வைக் குறித்து உக்கிரான கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்பதையும் இத்தகைய அழிவுகள் ஞாபகமூட்டுகிறது.

சமீப தலைமுறைகளில் வேறெந்த அழிவுகளைவிடவும் கொரேனா தொற்று மனுக்குலத்தை உலுக்கியுள்ளது என்பது நிதர்சனம். இங்கிலாந்தைப் பொறுத்த அளவில் ஆரம்பத்தில் மருத்துவ/அறிவியல் உலகம் காட்டிய மெத்தனம், நாள் செல்லச்செல்ல தீவிரம் காட்ட வேண்டியதாயிற்று. சீனாவின் வல்லமை நடுக்கத்தில் முடிந்தது; ஈரான் அரசு அதிர்ச்சியில் உறைந்தது; ஐரோப்பிய நாடுகள் பதற்றத்துடன் அடைக்கலம் தேட வேண்டியதாகிவிட்டது; வல்லரசு என்று மார்தட்டிய அமெரிக்கவோ மற்ற நாடுகளுக்கு சற்றும் மேலானதல்ல எனும் நிலைக்கு தாழ விழுந்தது.

நிபுணத்துவ கணிப்புகளைத் தாண்டி வேகமாகப் பரவிய இந்தத் தொற்று சில மாறாத கோட்பாடுகளை உணர்த்தியுள்ளது என்றால் மிகையாகாது. குறிப்பாக, வயதானவர்கள் ( இந்த கட்டுரையை எழுதிய ஆசிரியர் உட்பட) ஆபத்தின் விளிம்பில் நிற்கிறவர்களாகின்றனர். நீண்ட வருடங்கள் தங்கள் வாழ்வில் கடவுளைத் தேடாதவர்கள் நிலையை யோசித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இளைஞர்கள்/மாணவர்களுக்கு இந்த வாதை சொல்லும் செய்தியானது: உங்களுக்கு இன்னும் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது; ஆனாலும் தேவனின் நீடிய பொறுமையை சோதிக்காதீர்கள். தேவன் தமது அன்பை வெளிப்படுத்தியுள்ள இன்றே அவரை நினையுங்கள். அவர்

அன்புள்ளவர் என்று சொல்லும் கர்த்தரின் வார்த்தைதான் அவர் பரிசுத்தமும், நீதியுமுள்ளவர் என்று பறைசாற்றுகிறது.

இந்த எச்சரிக்கை ஒருவேளை கடைசி எச்சரிக்கையாகவும் இருக்கலாம்; ஏனெனில், இந்த வைரஸ் தாக்கத்தின் வீரியம் எத்தகையது என்பதை நாம் இன்னும் முழுமையாக அறியவில்லை. உலகமெங்கும் பலர் உதவிக்கரம் நீட்டுவதையும், மருத்துவர்கள் கடினமாக உழைப்பதையும், மேலும் விசுவாசிகளும் இவற்றோடு தேவனுடைய இரக்கத்திற்காக ஜெபிப்பதையும் அனுதினமும் நாம் பார்க்கிறோம். என்றபோதிலும், இந்த உலகளாவிய கொடிய நோய் சொல்லும் செய்தியையும் அதை அர்த்தத்தையும் கேட்பது மிக மிக அவசியமாகிறது. தமது பாடுகள் மற்றும் சிலுவை மரணத்தின் மூலம் தேவனோடு ஒப்புரவாகுதல் எனும் நித்திய இரட்சிப்பின் வழியை ஏற்படுத்தின கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் மனந்திரும்பி விசுவாசித்து உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதே அந்த செய்தியாகும். இந்தக்காலம் கொடுக்கும் அறைகூவல் இதுவேயாகும்.

**Dr.Peter Masters**
**Metropolitan Tabernacle, London**
**தமிழில்: ஜான் நெல்சன்**